**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 80/2023**

**2023ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ஆம் தேதி வியாழக்கிழமை**

வா.சா.1 சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி உதவியாளர் திரு.பி.இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | பாண்டியராஜன் | தபெ/கபெ |
| ஊர் | | வட்டம் |
| சாதி | | சமயம் |
| வயது | | தொழில் |

**முதல்விசாரணை:-**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பில் 1வது சாட்சி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது. அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு கையெழுத்திட்டேன். அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். பிராதுகடன்தாக்கல் வம்சாவழி ஜாபிதா அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 5.8.2016 தேதிய 26.07.2016ந் தெதி வாதியின் தந்தை இறந்ததற்கு கொடுக்கப்பட்ட இறப்பு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 7.10.2016 தேதிய வாதியின் தந்தையின் வாரிசு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 28.3.2023 தேதிய தாவா சொத்துக்கள் சம்பந்தப்பட்ட கணினி பட்டா கணினி பதிவிறக்கம் செய்யப்பட்டது **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1432ம் பசலிக்கு தாவா சொத்துக்களுக்கு வாதி செலுத்தியகிஸ்திரசீது அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 24.3.2023 தாவா 7, 8 லக்க சொத்துக்களை பொறுத்து 4ம் பிரதிவாதி பெயரில் மோசடியாக உற்பத்தி செய்துள்ள 23.02.2012ந் தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 25.3.2023 தாவா சொத்துக்களை பொறுத்து 5ம் பிரதிவாதி பெயரில் மோசடியாக உற்பத்தி செய்துள்ள 23.11.2012ந் தேதியிட்ட ஈடுகடன் ஆவணம்

சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுப்படி தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**சார்பு நீதிபதி**
**மானாமதுரை**